# DEPOSITION OF WITNESS

*( XXIII Code of Criminal Procedure)*

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, SIVAGANGAI.**

**Prosecution:**PW.5

**Deposition of witness for }**

**Defence:**

**Case No.** Sessions Case No.**SC-9/2017**

| | | | |
|---|---|---|---|
| **Name** | ராஜ்குமார் | **S/o.** | சிதம்பரம் |
| **Village** | சத்திரப்பட்டி | **Taluk** | ஓரத்தநாடு |
| **Religion** | இந்து | **Calling** | அ.சா.5 |
| **Date** | 22-11-2022 | **Age** | 40/2022 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X 1872 of the day 22.11.2022.**

**முதல் விசாரணை:**

நான் மேலேக் கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனது தாயார் பெயர் சிங்கம்மாள். எனது தகப்பனார் பெயர் சிதம்பரம். எனது பெற்றோர் விவசாயம் செய்து வருகிறார்கள். நான் வெல்டிங் வேலை செய்து வருகிறேன். எனது அக்கா பெயர் ராஜேஸ்வரி ஆகும். எனது அண்ணன் பெயர் கிருஷ்ணமூர்த்தி ஆகும். இரண்டாவது அக்கா பெயர் முத்துலெட்சுமி, 3வது அக்கா பெயர் விஜயராணி, 2வது அண்ணன் பெயர் செந்தில்குமார், எனது தம்பி பெயர் சதீஸ்குமார் ஆகும். கடந்த 26.02.2015ம் தேதி அன்று காலை 09.00 மணியளவில் நான் வெல்டிங் வேலை செய்து கொண்டிருக்கும் போது எனது அண்ணன் கிருஷ்ணமூர்த்தி என்பவர் விபத்திற்குள்ளாகி விட்டதாக தகவல் வந்தது. நான் வேலை செய்யும் இடத்திலிருந்து நமணசமுத்திரம் சென்று பார்க்கும் போது எனது அண்ணன் கிருஷ்ணமூர்த்தி ரயில்வே தண்டவாளத்தில்

இறந்து கிடந்தார். நான் சம்பவம் சம்பந்தமாக வீட்டில் இருந்த எனது தாயார் மற்றும் அண்ணன் செந்தில்குமார் ஆகியோருக்கு போன் மூலமாக தகவல் சொன்னேன். அவர்கள் நேரடியாக திருமயத்திற்கு பிரேத பரிசோதனை செய்யும் இடத்திற்கு வந்துவிட்டார்கள். நான் அவர்களுக்கு தகவல் சொல்லிவிட்டு ஆம்புலன்சில் திருமயம் அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டேன். எனது அண்ணனின் பிரேதத்தை சடலக் கூறாய்வு செய்து பிரேதத்தை எங்கள் வசம் ஒப்படைத்துவிட்டார்கள். எனது அண்ணன் சடலத்தை எங்கள் சொந்த ஊருக்கு எடுத்து சென்று நல்லடக்கம் செய்துவிட்டோம். மனவருத்தத்தில் இரண்டு மாதங்கள் ஓடிவிட்டது. எனது இறந்து போன அண்ணன் கிருஷ்ணமூர்த்தியின் மூத்த மகள் அன்புக்கரசி 12.05.2015 அன்று ஊரணிபுரத்திலிருந்து எனது அண்ணன் செந்தில்குமாருக்கு தகவல் கொடுத்தது. அன்புக்கரசி ஊரணிபுரத்தில் இருப்பதாகவும் தன்னை வந்து அழைத்துச் செல்ல வேண்டும் என்றும் எனத அண்ணனுக்கு தகவல் சொன்னது. எனது அண்ணன் அங்கு சென்று அன்புக்கரசியை சத்திரப்பட்டியில் உள்ள எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்தார். அன்புக்கரசி எனது அண்ணன் கிருஷ்ணமூர்த்தியை தனது தாயார் இரண்டு நபர்களும் சேர்ந்து கொலை செய்து ரயில்வே தண்டவாளத்தில் போட்டுவிட்டதாக சொன்னது. அதன்பின் இரண்டு நாட்கள் கழித்து அண்ணனின் 2வது மகள் அபிராமியும் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டது. அபிராமி எனது அண்ணன் கிருஷ்ண மூர்த்தியை 3வது எதிரி மற்ற இரண்டு எதிரிகளுடன் சேர்ந்து கொலை செய்ததாகவும் அதற்கு அக்கா அன்புக்கரசியும் உடந்தையாக இருந்ததாகவும் தகவல் சொன்னது. 15.05.2015 அன்று திருச்சியில் உள்ள காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு நான் எனது தாயார், எனது அண்ணன் சென்று புகார் கொடுத்தோம். அவர்கள் எங்களை விசாரித்தார்கள். நாங்கள் வீட்டுக்கு

வந்துவிட்டோம். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்க நான் நடந்த விபரங்களை கூறினேன்.

2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

எனக்கு உடன் பிறந்தவர்கள் 6 நபர்கள். அதில் ஆண் என்னையும் சேர்த்து 4 பேரும், பெண் 3 பேரும் ஆவார்கள். இறந்து போன கிருஷ்ணமூர்த்தி ஆண்களில் மூத்தவர். இறந்து போன கிருஷ்ணமூர்த்தி 3வது எதிரியை திருமணம் செய்து கொண்டு நமணசமுத்திரத்தில் கடந்த 20 வருடங்களாக வாழ்ந்து வந்தார். அந்த 20 வருட காலங்களில் எனது அண்ணனுக்கும் அவரது மனைவிக்கும் பிரச்சினைகள் ஏற்பட்டு காவல் நிலையம் சென்றதாக எனது அண்ணன் கூறி நான் தகவல் கேள்விப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது அண்ணன் கிருஷ்ணமூர்த்தி இறப்பதற்கு 2 வருடங்களுக்கு முன்பாக சண்டை சச்சரவு இருப்பதாக கேள்விப்பட்டேன். என்ன சண்டை என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது அண்ணன் மகள்கள் என்னிடம் செல்போனில் பேசியது கிடையாது. எனது தாயரிடமும், என் அண்ணன் செந்தில்குமாரிடம் பேசினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. என் அண்ணன் கிருஷ்ணமூர்த்தி அவரது மனைவி மற்றும் பிள்ளைகள் எங்கள் ஊருக்கு வந்து செல்வார்கள். என் அண்ணன் குடும்பம் நமணசமுத்திரத்தில் வசதியாக வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரிதான். என்னுடைய செல்போன் நம்பர் இறந்து போன என் அண்ணன் கிருஷ்ணமூர்த்தியை தவிர வேறு யாருக்கும் தெரியாது என்றால் சரிதான். என் அண்ணன் இறப்பதற்கு சுமார் 1 மாதத்திற்கு முன்பு நமணசமுத்திரத்திற்கு வந்து சென்றேன். அப்போது என் அண்ணன் என்னிடம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு என் அண்ணன் கிருஷ்ணமூர்த்தி இறந்தது சம்பந்தமாக புதுக்கோட்டையில் வசித்து வரும் எனது மாமா ராஜேந்திரன் தகவல் சொன்னார். நான் மட்டும்

நமணசமுத்திரத்திற்கு சென்றேன். பிரேதம் கிடந்த இடத்திற்கு நான் காலை 10.30 - 11.00 மணியளவில் சென்றேன். சம்பவயிடத்தில் சுமார் 20, 25 நபர்கள் இருந்திருப்பார்கள். எனது அண்ணன் மனைவி பிரேதம் கிடந்த இடத்திலிருந்து சிறிது தூரத்தில் அழுது கொண்டிருந்தார்கள். அண்ணன் பிள்ளைகள் அந்த இடத்தில் கிடையாது. நான் எனது அண்ணன் பிள்ளைகளை தேடவில்லை. நான் பிரேதம் கிடந்த இடத்திற்கு செல்லும் போது ஒரே ஒரு போலீசார் மட்டும் இருந்தார். அந்த நேரத்திலேயே பிரேதத்தை திருமயம் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றுவிட்டார்கள். நான் தகவல் சொன்னதற்கு பின்னீடு எனது தாயார் எனது அண்ணன் செந்தில்குமார் ஆகியோர் நேரடியாக திருமயம் அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டார்கள். எனது தாயார் அரசு மருத்துவமனைக்கு வரும் போது காலை 11.00 மணி முதல் 12.00 மணி இருக்கும். எனது அண்ணன் செந்தில்குமார் மருத்துவமனைக்கு வரும் போது மாலை 04.00 மணியிருக்கும். நாங்கள் மருத்துவமனையில் இருந்த நேரத்தில் எனது அண்ணன் பிள்ளைகளிடம் நாங்கள் யாரும் பேசவில்லை. எனது அண்ணனின் பிரேதத்தை சத்திரப்பட்டியில் வைத்து எங்கள் குல வழக்கப்படி எரியூட்டி தகனம் செய்யப்பட்டது. கடந்த 12.05.2015ம் தேதி என் அண்ணனின் மூத்த மகள் அன்புக்கரசி சத்திரப்பட்டி கிராமத்திற்கு வந்து 3வது எதிரி மற்ற எதிரிகளுடன் சேர்ந்து அப்பாவை கொலை செய்துவிட்டதாக சொன்ன விஷயத்தை போலீசார் விசாரிக்கும் போது சொன்னேனா என்றால் போலீசார் என்னிடம் கேட்கவில்லை நான் சொல்லவில்லை. திருச்சிக்கு சென்று எனது தாயார் புகார் கொடுத்ததற்கு பின்னீடு என்னை போலீசார் விசாரிக்கவில்லை. என் அண்ணன் இறந்த சமயத்தில் என் அண்ணன் பிள்ளைகள் 3 பேரும் படித்துக் கொண்டிருந்தார்கள். என் இறந்த பின்னீடும் அவர்கள் பள்ளிக்கு சென்று வந்தார்கள் என்றால் சரிதான். என் அண்ணன் பிள்ளைகளுக்கு சத்திரப்பட்டிக்கு

வரும் வழி தெரியும். ஏற்கனவே வந்து சென்றுள்ளார்கள். என் அண்ணன் இறந்த பின்னீடு 3 மாத காலத்தில் நாங்கள் யாரும் எனது அண்ணியையோ, அவரது பிள்ளைகளை பார்க்க செல்லவும் இல்லை அவர்களை பற்றி விசாரித்து தெரிந்து கொள்ளவும் இல்லை. எனது அண்ணிக்கு அவரது பெற்றோர்கள் அதிகளவு சொத்துக்களை பிரித்துக் கொடுத்துள்ளார்கள். எனது அண்ணன் கிருஷ்ண மூர்த்தியும் 3வது எதிரியும் தங்களுக்கு கஷ்டம் என்று இதுநாள் வரை எங்கள் வீட்டிற்கு வந்ததில்லை. 1, 2 எதிரிகளை இதற்கு முன்பு நான் பார்த்ததில்லை. என் அண்ணன் உண்மையில் ரயில் விபத்தில் தான் இறந்தார் என்றும் நான் சொல்வது போல் 3வது எதிரி மற்ற எதிரிகளுடன் சேர்ந்து என் அண்ணனை கொலை செய்யததாக கேள்விப்படவில்லை என்றும் புகார்தாரர் எனது தாயார் என்பதாலும் இறந்தது என் அண்ணன் என்பதாலும் வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் 1, 2வது எதிரிக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை என்று சென்னால் சரியல்ல.

1வது எதிரி 2வது எதிரியின் குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

3வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

இறந்து போன கிருஷ்ணமூர்த்தி எனது பெற்றோருக்கு மூத்த மகன் என்று சொன்னால் சரிதான். அவருக்கு பிறகு தான் இரண்டு சகோதரிகள் என்றால் சரிதான். இறந்து போன எனது அண்ணன் கிருஷ்ணமூர்த்தி 3வது எதிரியை திருமணம் செய்து கொண்டு வீட்டோடு மாப்பிள்ளையாக போய்விட்டார் என்றால் சரிதான். 3வது எதிரிக்கு கோடிக்கணக்கான சொத்துகள் இருந்த காரணத்தினால் தான் எனது அண்ணன் வீட்டோடு மாப்பிள்ளையாக சென்றுவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. 3வது எதிரியின் சொத்துக்கள் விபரம் எனக்கு தெரியாது. எனது அண்ணன் கிருஷ்ணமூர்த்தி வீட்டிற்கு அவர் இறப்பதற்கு முன்பாக நான் அடிக்கடி

சென்று வருவேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் எனது அண்ணன் கிருஷ்ணமூர்த்தியின் வீட்டிற்கு வருடத்திற்கு 2 முறை சென்று வருவார். 26.02.2015ம் தேதி எனக்கு எனது மாமா ராஜேந்திரன் போன் மூலம் என் அண்ணன் கிருஷ்ணமூர்த்தி விபத்தில் இறந்ததாக தகவல் சொன்னார். நான் விபத்து நடந்த இடத்திற்கு 10.00 - 10.30 மணியளவில் சென்றுவிட்டேன். நான் போய் பார்த்த பிறகு தான் எனது பெற்றோருக்கு தகவல் தெரிவித்தேன். அதற்கு முன்பு அவர்களுக்கு தெரியாது. 12.05.2015ம் தேதி என் அண்ணன் கிருஷ்ணமூர்த்தியின் மூத்த மகள் அன்புக்கரசி என் ஊரில் அருகில் உள்ள ஊரணிபுரத்தில் நின்று என் அண்ணனுக்கு போன் செய்து வந்து அழைத்து சென்றதாக எனக்கு தகவல் சொன்னார்கள். நான் வெல்டிங் கடை வைத்திருப்பதால் காலை 08.00 மணிக்கு சென்று இரவு 08.00 மணிக்கு தான் வருவேன் என்றால் சரிதான். எனது சகோதரர் கிருஷ்ணமூர்த்தியின் மூத்த மகள் அன்புக்கரசி எத்தனை மணிக்கு போன் செய்தார், எத்தனை மணிக்கு வந்தார் என்று எனக்கு நேரடியாக தெரியாது. எனது அண்ணன் செந்தில்குமார் சொல்லி தான் எனக்க அந்த விபரம் தெரியும். என் அண்ணன் கிருஷ்ணமூர்த்தியின் 2வது மகள் அபிராமி அவரது சகோதரி எங்கள் வீட்டிற்கு வந்த 3 நாட்கள் கழித்து வந்தார். அவர் எத்தனை மணிக்கு வந்தார் என்று எனக்கு தெரியாது. மாணிக்கம் என்பவர் என் தாய்மாமா ஆவார். நானும் எனது தாய், எனது தாய்மாமன் மாணிக்கம், என் அண்ணன் செந்தில்குமார் ஆகிய நால்வரும் புகார் கொடுக்க சென்றோம் என்றால் சரிதான். நாங்கள் புகார் கொடுத்த போது தான் போலீசார் என்னை விசாரித்தார்கள். அதன் பிறகு என்னை விசாரிக்கவில்லை. மற்றவர்களையும் அன்று விசாரித்தார்கள். பிறகு விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. என் அண்ணன் வீட்டில் ஒரு காரும் இரண்டு இரு சக்கர வாகனங்களும் இருந்தன என்றால் கார் இருந்தது

தெரியும். இரு சக்கர வாகனங்கள் பற்றி தெரியாது. அந்த கார் எனது அண்ணன் பெயரில் பதிவு சான்றிதழ் உள்ளது. அந்த காரை இப்போது நான் பயன்படுத்தி வருகிறேன். எங்கள் ஊரில் உள்ளது. என் அண்ணனுக்கு கூடுதலாக இரண்டு இரு சக்கர வாகனங்கள் இருந்தது என்றும் அவைகளையும் நான் தான் பயன்படுத்தி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. 3வது எதிரி வசந்தி சிறைக்கு சென்ற பின்னீடு எங்கள் குடும்பத்தார் தான் ஜாமீனில் எடுத்தார்கள் என்றால் இல்லை எனது மாமா மாணிக்கம் தான் ஜாமீன் எடுத்தார். வசந்திக்கு பிணை முறிவு இரண்டு சகோதரிகளின் கணவர்கள் கொடுத்தார்கள். அதன் பிறகு 3வது எதிரி வசந்தியை எங்கள் வீட்டில் தான் வைத்திருந்தோம் என்றால் இல்லை எனது சகோதரி வீட்டில் இருந்தார். அதன் பிறகு எனது பாதுகாப்பில் ஒரு மாதம் இருந்தார். சொத்தை எழுதி வைக்கச் சொல்லி எனது பெற்றோர், எனது சகோதரர், எனது அண்ணன் பிள்ளைகள் பேசினார்கள் என்றால் அந்த இடத்திற்கு நான் போகவில்லை. அந்த பஞ்சாயத்தில் சொத்துக்களை 3வது எதிரி வசந்தி எழுதி வைக்க மறுத்து பஞ்சாயத்திற்கு உடன்பட மறுத்துவிட்டதால் வீட்டை விட்டு நான் அனுப்பிவிட்டேன் என்று சொன்னால் இல்லை. ராஜேந்திரன் எனது தாய் மாமா ஆவார். நான் சொல்வது போல் எந்த வழக்கு சம்பவமும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் சகோதரர் விபத்தில் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. எனது குடும்பத்தார்கள் பின் யோசனை செய்து சொத்துக்களை எழுதி கேட்டு எழுதி தர வசந்தி மறுத்துவிட்டதால் எனது குடும்பத்தார் கொடுத்த பொய் வழக்கிற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது அண்ணனின் மூத்த மகள் அன்புக்கரசியை எனது மற்றொரு அண்ணன் செந்தில்குமாரின் மைத்துனருக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் 3வது எதிரி வசந்திக்கும்

எவ்வித சம்பந்தமுமில்லை என்றால் சரியல்ல. 3வது எதிரியின் சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்.ஆர்.சத்யதாரா, 22.11.2022
கூடுதல் மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

//உண்மை நகல்//